30.09.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### சம்பா நெற்பயிரில் பயிர் பாதுகாப்பு முறை



**திருவள்ளூர்:** தற்போதுள்ள பருவத்தில் சம்பா நெற்பயிரில் நோய் தாக்குதலை தவிர்க்க பயிர் பாதுகாப்பு முறைகளை விவசாயிகள் கடைபிடித்தால் நஷ்டத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம் என மாவட்ட வேளாண் துறையினர் அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து மாவட்ட வேளாண் இணை இயக்குநர் முருகவேல் கூறியதாவது:

திருவள்ளூர் மாவட்டத்தில், தற்போதுள்ள பருவநிலை மாற்றங்களினால் சம்பா பட்டத்தில் நடவு செய்வதற்கு, நெற்பயிரில் பரவலாக இலைமடக்குப் புழு, குருத்துப் பூச்சி, கருவண்டு, முள்வண்டு மற்றும் இலைப்புள்ளி நோய் ஆகியவற்றின் தாக்குதல் பரவலாகக் காணப்படுகிறது. இது மேலும் பரவ வாய்ப்புள்ளது. அப்படி

பரவும்போது விவசாயிகள் பெருத்த நஷ்டத்தை சந்திக்க நேரிடும். எனவே, அனைத்து விவசாயிகளும் ஒருங்கிணைந்து ஒரே நேரத்தில், இலை மடக்கு புழு, குறுத்துப் பூச்சி, இலைப்புள்ளி நோய் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த காரிடாப் ஹைட்ரோ குளோரைடு 400 கிராம் அல்லது தயோமிதக்ஸம் 40 கிராம் அல்லது டிரையோஸோபாஸ் 500 மில்லி மற்றும் கார்பன்டைசிம், மான்கோசெப் 400 கிராம், ஒரு ஏக்கருக்கு 60 லிட்டர் தண்ணீர் கலந்து விசைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

கருவண்டு மற்றும் முள்வண்டு ஆகியவற்றைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு அசிபேட் 500 கிராம் வாங்கி, 60 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

மருந்து தெளிப்பதற்கு முன் வயலில் தேங்கியுள்ள அதிகப்படியான நீரை வெளியேற்றிட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## இன்று மழைக்கு வாய்ப்பு

தமிழகம், புதுவையில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள மேலடுக்கு சுழற்சியின் காரணமாக, தமிழகத்தில் பல்வேறு இடங்களில் புதன்கிழமை இரவு கனமழை கொட்டித் தீர்த்தது. அதிகபட்சமாக காஞ்சிபுரம் மாவட்டம் உத்தரமேரூர், தாம்பரத்தில் 110 மி.மீ மழையும், சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் 100 மி.மீ.மழையும், சென்னை டிஜிபி அலுவலகம், திருவண்ணாமலை ஆகிய பகுதிகளில் 90 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

இந்த நிலையில், தமிழகத்தில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் கூறியதாவது:-

தெலங்கானா முதல் தென் தமிழகம் வரை வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள மேலடுக்கு சுழற்சியின் காரணமாகவும், வெப்பச்சலனத்தின் காரணமாகவும் மழை பெய்து வருகிறது. இதனால், தமிழகம், புதுவையில் ஓரிரு இடங்களில் மழையோ அல்லது இடியுடன்

கூடிய மழையோ பெய்யக்கூடும். சென்னையில் மாலை அல்லது இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளது. மழையின் தாக்கம் படிப்படியாகக் குறையும் என்றனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மரக்காணத்தில் 49 மி.மீ., மழை

விழுப்புரம்: விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று அதிகாலை பல்வேறு இடங்களில் மழை பெய்தது.

இதில், செஞ்சியில் 8.50 மி.மீ., - திருக்கோவிலூர் 17 மி.மீ., - திண்டிவனம் 15 மி.மீ., - விழுப்புரம் 2 மி.மீ., - வானூர் 41 மி.மீ., - சங்கராபுரம் 27 மி.மீ., - மரக்காணம் 49 மி.மீ., என மொத்தம் 159.50 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. மாவட்டத் தில் சராசரியாக 19.94 மி.மீ., மழை பெய்தது.

### கிராமங்களில் பயிர் சாகுபடியில் பாதிப்பு ஏற்பட்டால் இழப்பீடு பெறலாம் கலெக்டர் தகவல்

தேனி, "கிராம அளவில் பயிர் சாகுபடியில் பாதிப்பு ஏற்பட்டாலும் விவசாயிகளுக்கு இன்சூரன்ஸ் மூலம் இழப்பீடு வழங்கப்படும்," என, கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பிற்கான இன்சூரன்ஸ் திட்டம் நடைமுறையில் உள்ளது. இதில் வட்டாரம் மற்றும் பிர்கா அளவில் பயிர் சேதமடைந்தால் இழப்பீடு வழங்கப்பட்டு வந்தது.

தற்போது பாரத பிரதமர் பயிர்பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கிராம அளவிலும் பயிர் சேதமடைந்தால் இன்சூரன்ஸ் மூலம் இழப்பீடு வழங்கும் வகையில் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் பயிர் காப்பீட்டு திட்டத்திற்கு நியூ இந்தியா இன்சூரன்ஸ் திட்டத்தில் பிரிமியம் செலுத்த வேண்டும். தேசிய

மயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் கடன்பெற்றால் அப்போதே பயிர் காப்பீட்டு தொகை பிடித்தம் செய்யப்படும்.

கடன்பெறாத விவசாயிகள் சாகுபடி பயிருக்கு ஏற்ப பிரிமிய தொகை செலுத்தி பாதிப்பு ஏற்பட்டால் இழப்பீடு பெறலாம். ரூ. 10 ஆயிரம் மதிப்பிலான நெல் பயிருக்கு 1.5 சதவீதம் ரூ.150 காப்பீடு செய்ய வேண்டும். கம்பு, உளுந்து, நிலக்கடலை, சோளம், மக்காசோளம் ஆகியவற்றிற்கு 2 சதவீதம், தோட்டக்கலை பயிர்களான வெங்காயத்திற்கு 1.5 சதவீதம், வாழைக்கு 5 சதவீதம் என பிரிமியம் செலுத்த வேண்டும். பயிர்களில் வறட்சி, வெள்ளம், நோய் பாதிப்பு ஏற்பட்டால் கிராம அளவிலேயே இன்சூரன்ஸ் பெறலாம். எனவே, விவசாயிகள் பயிருக்கு காப்பீடு செய்து பயன்பெற வேண்டும் என கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்தார்.

## மிளகாய் விதைகள் தட்டுப்பாடு

முதுகுளத்தூர், :முதுகுளத்தூரில் மிளகாய் விதைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் புதிய மிளகாய்களை உடைத்து விதைகளை சேகரிக்கின்றனர்.

முதுகுளத்தூர் பகுதியில் காக்கூர், கீழத்தூவல், சாம்பக்குளம், பொலிகால், உடைகுளம், கீழக்கன்னிசேரி, பொன்னக்கனேரி, வளநாடு, தாழியரேந்தல் உட்பட 60 க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆண்டுதோறும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் மிளகாய் சாகுபடி நடக்கிறது. சில வாரங்களுக்கு முன்பு பெய்த மழையினால் விவசாய நிலங்கள் ஈரப்பதத்துடன் உள்ளது. இதை பயன்படுத்தி விவசாயிகள் மிளகாய் நாற்றுகள் தயார் செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் மிளகாய் விதைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் வேறுவழியின்றி புதிய மிளகாய்களை உடைத்து அதன் விதைகளை சேகரித்து வருகின்றனர்.

இதுகுறித்து சாம்பக்குளம் விவசாயி அழகர் கூறுகையில்," மிளகாய் விதைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விவசாய நிலங்கள் ஈரப்பதமாக இருப்பதால் நாற்றுக்காக புதிய மிளகாய் வத்தல்களை உடைத்து விதைகளை சேகரித்து வருகிறோம். மிளகாய் நாற்றுக்கள் நடவு பணியின்போது, களைக்கொல்லி மருந்துகள் தட்டுப்பாடின்றி வழங்க வேளாண் துறையினர் முன்வரவேண்டும்," என்றார்.

**தர்மபுரி, பாலக்கோடு பகுதிகளில் பரவலாக மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

தர்மபுரி: தர்மபுரி, பாலக்கோடு பகுதியில், நேற்று முன்தினம் பரவலாக மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

தர்மபுரி மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டு வந்தாலும், மழை பெய்யாமல் விவசாயிகள் மற்றும் பொதுமக்களை ஏமாற்றி வந்தது. இதனால், தென்மேற்கு பருவமழையை நம்பி, மானாவாரி பயிர் சாகுபடி செய்த விவசாயிகள் கவலை அடைந்தனர். இந்நிலையில், நேற்று பகல், 12:00 மணிக்கு, பாலக்கோட்டில் சிறிது நேரம் சாரல் மழை பெய்தது. மாலை தர்மபுரி பகுதியில் சாரல் மழை பெய்தது. இரவு தர்மபுரி மற்றும் அதை ஒட்டியுள்ள பகுதிகளிலும், பாலக்கோடு சுற்றுவட்டார பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கனமழை பெய்தது. இதில், அதிகபட்சமாக பாலக்கோட்டில், 47 மி. மீ., தர்மபுரியில், 8 மி. மீ., கலெக்டர் அலுவலகத்தில், 4 மி.மீ., மழையளவு பதிவானது. மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். மழையின் காரணமாக, தர்மபுரி நகரின் பல்வேறு பகுதிகளில், இரண்டு மணி நேரத்திற்கு மேல் மின்தடை ஏற்பட்டது. குறிப்பாக, தர்மபுரி அடுத்த வெங்கட்டம்பட்டியில் நேற்று முன்தினம் இரவு, 10:00 மணி முதல், நேற்று காலை, 10;00 மணி வரை மின்தடை ஏற்பட்டதால், இப்பகுதி மக்கள் சிரமம் அடைந்தனர்.

**முக்கனிகளின் தோழி தக்காளி**



மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளின் தோழிகளில் தக்காளிக்கு முக்கிய பங்குண்டு. உணவுகளில் தக்காளியை தவிர்க்க இயலாது. காரைக்குடி அருகே மீனாட்சிபுரம் முத்துமாரியம்மன் கோயில் பங்குனி பொங்கல் திருவிழாவின் போது, அம்மனுக்கு தக்காளி பழச்சாறு கொண்டு அபிஷேகம் செய்யப்படுவதன் மூலம், தெய்வ ஆராதனைக்கு தக்காளியும் துணை நிற்பது குறிப்பிடத்தக்கது. ஆரோக்கியம் அளிக்கும் ஆரஞ்சுப் பழத்திற்கு இணையாக, தக்காளிப் பழம் உடலுக்கு நல்ல பலத்தையும், ரத்த விருத்தியையும் அளிக்கக் கூடியது. இது ரத்தத்தை சுத்திகரித்து, சரும நோய்களை குணப்படுத்து கிறது. நரம்பு தளர்ச்சியை போக்குகிறது. கண் பார்வையை தெளிவாக்குகிறது. தாகத்தை தணிக்கிறது. பொதுவாக ஆண்டு முழுவதுமே தக்காளியை பயிர் செய்யலாம். வடிகால் வசதியும், கார அமிலத்தன்மையும் உள்ள வண்டல் மண், தக்காளி பயிருக்கு மிகவும் ஏற்றது. தொழுஉரம், தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து, போராக்ஸ், துத்தநாக சல்பேட் ஆகியவற்றை அவ்வப்போது இட்டு, மண்ணை அணைத்து விவசாயம் செய்ய வேண்டும்.

நல்ல விதைகள், உரிய நிலம், நீர் வசதி, ஊட்டச்சத்து, பயிர் பாதுகாப்பு, நோய் கடுப்பு முறைகள் ஆகியவற்றின் அடிப்படையிலே குறுகிய காலத்திலே அறுவடை செய்யலாம். காய் பழமாக மாறுகின்ற பொழுது குளோரோபில் நிறமிகளின் அளவு குறைந்து, கரோடின், ஆந்த்தோசன் ஆகிய நிறமிகளின் அளவுகள் அதிகரிப்பதால்

தக்காளியின் தோல் இயல்பாகவே சிவப்பாக மாறுகிறது. தக்காளிப் பழத்தில் வைட்டமின் 'சி', சுண்ணாம்பு சத்து அதிகளவில் அடங்கியுள்ளன. தோல், நரம்புகள் ஆகியவற்றை பாதுகாப்பதோடு, நோயை எதிர்க்கும் சக்தி கொண்டதாகவும் விளங்குகின்றன. மாலிக் அமிலம், சிட்ரிக் அமிலம் ஆகியனவையும் தக்காளி பழத்தில் அடங்கியுள்ளன. உடலுக்கு தேவையான ஆற்றலை அதிகமாக இயக்க சிட்ரிக் அமிலம் பெரிதும் உதவுகிறது. மாலிக் அமிலம் வயிற்றுப் பாகத்தில் கல் உருவாவதைத் தடுக்கின்றது.

**செர்ரி எனும் சீமை தக்காளி**: தென்னாப்ரிக்காவை தேசமாக கொண்டது. உருளை கிழங்கிற்கு சம்பந்தமானது என தக்காளியை கூறுவர். தாவர இயல் பிரகாரம் 'ஒரு வகை ரசம் நிறைந்த சிறு பழம்' (பெர்ரி) என வகுக்கப்பட்டுள்ளது. 18 ம் நூற்றாண்டில் தக்காளி இந்தியாவிற்கு வந்தபோது 'சீமை தக்காளி' என அழைத்தனர். மிகச்சிறிய வடிவத்தில் உள்ளவை 'செர்ரி ரகம்' என்ற 'சீமை தக்காளி' என ஆங்கிலேயர்களால் கூறப்பட்டது.

**கண் கருவளையம் நீங்கும்:** தக்காளிச்சாறு ரத்த விருத்தியைப் பெரிதும் அளிக்கிறது. தோலுக்கு பளபளப்பை பகிர்கிறது. கண்களில் தோன்றும் கருவளையம் நீங்கவும், கண்களின் ஓரங்களில் உண்டாகும் தோல் சுருக்கங்களைப் போக்கவும், தக்காளிப்பழ விழுதை அவற்றின் மீது பூசி குணம் அடையலாம். சருமப் பிணிகள் வராமல் காக்கிறது. வாய்ப்புண், வயிற்றுப்புண், நாக்குப்புண்களை ஆற்றுகின்றது. தக்காளிப் பழத்தில் நாட்டுத் தக்காளி, பெங்களூரு தக்காளி என இரண்டு ரகங்கள் உள்ளன. நாட்டு தக்காளி மிக மென்மையான தோலைக் கொண்டிருக்கும். சமைக்காமல் சாப்பிடுவதற்கு இந்த ரகத் தக்காளி மிகவும் சுவையாக இருக்கும்.

**நவீன வணிகத்தின் நாடித்துடிப்பு**: தக்காளியின் விலை 80 ரூபாய் வரை உயரவும் செய்யும், எட்டு ரூபாய் வரை இறங்கவும் செய்யும். விளைச்சல், வியாபார யுக்தி, சேமிப்பு ஆகியவற்றை சார்ந்து விலை இருந்து வருகிறது. தொழில் முறையிலே டொமட்டோ ரைஸ் பவுடர், டொமட்டோ பேஸ்ட், டொமட்டோ கெட் சூப் முதலான தயாரிப்புகள் நவீன வணிகத்திற்கு இதமாக அமைந்துள்ளன. தக்காளிப் பழங்களை கொதிக்கும் நீரில் சிறிது நேரம் போட்டு அவற்றின் தோலை எளிதாக உரித்து விடலாம். பின் இவற்றை கொண்டு சுவையான சட்னி, பச்சடி,

குழம்பு, குருமா, ரசம், சூப் தயாரிக்கலாம். தக்காளிச்சாதம் சாப்பிட உடல் உஷ்ணம் மாறும். கர்ப்பிணிகள் தினமும் தக்காளிப் பழங்களை தக்கவாறு உட்கொண்டால் பிறக்கும் குழந்தை சிவந்த தோல் நிறத்தோடு மிளிர வாய்ப்புள்ளது. நம் வீட்டு தோட்டத்தில் வளர்க்க ஏற்றது தக்காளி. **- எஸ்.நாகரத்தினம் முன்னோடி விவசாயி விருதுநகர்**

## உளுந்து சாகுபடியில் நேர்த்தியான மகசூல்



அன்றாட உணவில் பயிறு வகைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. உலகின் மொத்த பயறு வகை சாகுபடி பரப்பளவில் 32 சதவிகிதம் இந்தியாவில் உள்ளது. இதில் உளுந்து மிக முக்கியமான ஒன்றாக உள்ளது. இது தமிழ்நாட்டில் ஆண்டு முழுவதும் தனிப்பயிராகவோ அல்லது கலப்பு பயிராகவோ பயிரிடப்பட்டு விவசாயிகளுக்கு குறுகிய காலத்தில் லாபம் பெற்று தரக்கூடிய பயிராக விளங்குகிறது. எனவே பெருகி வரும் தேவையை பூர்த்தி செய்ய உயரிய தொழில் நுடபங்களை பின்பற்றினால் உற்பத்தியை பெருக்கலாம்.

**விதை நேர்த்தி:** ஒரு கிலோ விதைக்கு 'டிரைக்கோடெர்மா விரிடி' நான்கு கிராம் அல்லது 'சூடோமோனாஸ்' பத்து கிராம் அல்லது 'கார்பென்டாசிம்' இரண்டு கிராம் கலந்து 24 மணி நேரம் கழித்து விதைக்க வேண்டும். ஒரு எக்டேருக்கு தேவையான விதையுடன் 600 கிராம் 'ரைசோபியம்' மற்றும் 600 கிராம் 'பாஸ்போபாக்டீரியா' கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். விதைநேர்த்தி செய்யாவிட்டால் இரண்டு கிலோ 'ரைசோபியம்' மற்றும்

'பாஸ்போ பாக்டீரியா' உடன் 25 கிலோ தொழு உரம் மற்றும் 25 கிலோ மணல் கலந்து விதைப்பதற்கு முன்னால் இட வேண்டும்.

**விதைப்பு முறை**: விதைகளை 30 க்கு 10 செ.மீ., இடைவெளியில் விதைக்க வேண்டும். நெல் தரிசல் பயிரிடுவதாக இருந்தால் அறுவடைக்கு ஐந்து முதல் பத்து நாட்கள் இருக்கும் போது விதைகளை மண்ணில் தூவ வேண்டும். தூவும் போது மண்ணில் ஈரப்பதம் சரியாக இருக்குமாறு பார்த்து கொள்வது அவசியம். வரப்பு ஓரங்களில் பயிரிடுவதாக இருந்தால் 30 செ.மீ., இடைவெளியில் விதைகளை ஊன்ற வேண்டும்.

**உரம் இடுதல்**: ஒரு எக்டேருக்கு தொழு உரம் 12.5 டன் இட வேண்டும். விதைப்பதற்கு முன் அடியுரமாக மானாவாரி பயிராக இருந்தால் எக்டருக்கு 25 கிலோ யூரியா, 150 கிலோ சூப்பர் பாஸ்பேட், 20 கிலோ பொட்டாஷ் மற்றும் பத்து கிலோ கந்தகச்சத்து இட வேண்டும். இறவை பயிராக இருந்தால் எக்டேருக்கு 55 கிலோ யூரியா, 310 கிலோ சூப்பர் பாஸ்பேட், 80 கிலோ பொட்டாஷ் மற்றும் 20 கிலோ கந்தகச்சத்து இட வேண்டும்.

**டி.ஏ.பி., கரைசல்**: ஒரு எக்டேருக்கு தேவையான இரண்டு சதவிகித டி.ஏ.பி., தயாரிக்க பத்து கிலோ டி.ஏ.பி., உரத்தை 25 லிட்டர் தண்ணீரில் ஓர் இரவு ஊற வைக்கவும். பின் அதிலிருந்து தெளிந்த கரைசலை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து காலை அல்லது மாலை வேலையில் இலையில் நன்கு படும்படி பூக்கும் பருவத்தில் ஒரு முறையும் மீண்டும் 15 நாள் இடைவெளியில் ஒரு முறையும் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும். உளுந்தில் வறட்சி காலத்தில் இடைப்பருவ மேலாண்மை முறையாக இரண்டு சதவிகிதம் பொட்டாசியும் குளோரைடு மற்றும் 10 பி.பி.எம்., போரான் பரிந்துரைக்கப்படுகிறது. ராபி பருவத்தில் பொட்டாசியம் குளோரைடு தெளிப்பதன் மூலம் அதிக மகசூல் பெற முடியும்.

**நீர் நிர்வாகம்**: விதைக்கவுடன் ஒரு தண்ணீரும், பின் உயிர்த்தண்ணீரும் மூன்றாவது நாளில் பாய்ச்ச வேண்டும். காலநிலை மற்றும் மண்ணின் தன்மைக்கேற்ப 10 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் கட்ட வேண்டும். பயிரின் அனைத்து நிலைகளிலும் தண்ணீர் தேங்காமல் பார்த்து கொள்ள வேண்டும். குளிர்க்கும் பருவக்கில் வறட்சி இருந்தால் 0.5 சதவிகிதம் பொட்டாசியம் குளோரைடு கரைசலை இலைகளில் தெளிக்க வேண்டும்.

**மஞ்சள் தேமல் நோய்**: உளுந்தில் மஞ்சள் தேமல் நோயை கட்டுப்படுத்த நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட ரகங்களான வம்பன் 4, வம்பன் 5, வம்பன் 8 பயிரிடுதல் வேண்டும். வரப்போர பயிர்களாக ஏழு வரிசையில் சோளத்தை பயிரிடுதல் வேண்டும். 'இமிடாகுலோ பிரிட்' 70 டபிள்யு 5 மில்லி / கிலோ என்ற அளவில் விதைகளை நேர்த்தி செய்ய வேண்டும். உளுந்தில் மஞ்சள் சோகை நச்சுயிரி தாக்கப்பட்ட பயிர்களை ஆரம்பத்திலேயே களைய வேண்டும். 'டைமெத்தோயேட்' 750 மில்லி / எக்டர் என்ற அளவில் விதைத்து 30 நாள் கழித்து தழைத்தெளிப்பு செய்ய வேண்டும்.

**டாக்டர் எம்.குணசேகரன் தலைவர், பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிப்புத்தூர்**

## தோட்டக்கலை துறையில் தொய்வில்லா மானியங்கள்



தமிழக தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் விவசாயிகளுக்கு அரசு சார்பில் பல்வேறு மானிய திட்டங்கள் 2016 - 17 ம் ஆண்டில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாவட்டம் தோறும் வட்டார தோட்டக்கலை அலுவலகம் மூலம் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு திட்ட மானியங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

### தேசிய தோட்டக்கலை இயக்கம் வழங்கும் மானியம்

வ. எண் - இனம் - மானிய சதவிகிதம் - மானிய தொகை (எக்டேர்) ரூ.

1 - மா அடர் நடவு - 60 - 9,840

2 - கொய்யா - அடர் நடவு - 60 - 17,592

3 - திசு வாழை - 75 - 37,500

4 - பப்பாளி - 75 - 22,500

5 - வீரிய ஒட்டு காய்கறி - 40 - 20,000

6 - மலர்கள் - 40 - 16,000

7 - மிளகாய் - 40 - 12,000

8 - மா பழைய தோட்டம் புதுப்பித்தல் - 50 - 20,000

9 - நிழல் வலைக்குடில் அமைத்தல் - 50 - 355 ச.மீ.,

10 - பசுமைக்குடில் அமைத்தல் - 50 - 467.50 ச.மீ.,

11 - நிலப்போர்வை அமைத்தல் - 50 - 16,000

12 - ஒருங்கிணைந்த உர நிர்வாகம் - 30 – 500

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மீன்பிடி சீசன் காலம் : மீனவர்கள் வலையில் மத்தி மீன்கள், மீன்பிடி சீசன் காலம்

வேதாரண்யம்: வேதாரண்யம் தாலுகா ஆறுகாட்டுத்துறையில் மீனவர்கள் வலையில் கடந்த சில நாட்களாக நாள் ஒன்றுக்கு 10 டன் மத்தி மீன்கள் கிடைக்கின்றன. ஆறுகாட்டுத்துறையில் 300 பைபர் படகும், 65 விசைப்படகுகளும் உள்ளன. தற்போது ஆறுகாட்டுத்துறையில் மீன்பிடி சீசன் காலம் என்பதால் நாள்தோறும் 100க்கும் மேற்பட்ட படகுகள் மீன்பிடிக்க செல்கின்றன. மீனவர்கள் வலையில் தற்போது கேரளாவிற்கு அதிக அளவில் ஏற்றுமதியாகும் மத்தி மீன்கள் அதிக அளவில் சிக்குகின்றன. இந்த மத்தி மீன்கள் கிலோ 60 முதல் 65 ரூபாய் வரை விலை போகிறது.

இதனால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் மீனவர்கள் வலையில் வஞ்சிரம், வாவல், ஷீலா, பாறை, திருக்கை, இறால், நண்டு போன்றவையும் அதிக

அளவில் கிடைக்கின்றன. வஞ்சிரம், வாவல், ஷீலா கிலோ ரூ 400க்கும், பாறை ரூ 180க்கும், திருக்கை ரூ.150க்கும், இறால் ரூ 200க்கும் விற்பனை ஆகிறது. நாள்தோறும் ஆறுகாட்டுத்துறையிலிருந்து கேரளாவிற்கு 10 டன் மீன்கள் கேராளவிற்கு ஏற்றுமதியாவதால் மீன்பிடி தொழில் தற்போது முழு வீச்சில் நடைபெற்ற வருகிறது. இத்தொழிலை நம்பியுள்ள ஆயிரக்கணக்கான மீனவ குடும்பத்தினர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கமுதியில் கன மழை விவசாயிகள் மகிழ்ச்சி

கமுதி, : கமுதி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் நேற்று கனமழை பெய்ததால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.கமுதி பகுதியில் கடந்த சில மாதங்களாக கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்தது. இந்நிலையில் கடந்த மாதம் ஒருமுறை மழை பெய்தது. இதையடுத்து கமுதி அருகே உள்ள பசும்பொன், அபிராமம், பேரையூர், சடையனேந்தல், ஆணையூர், கருங்குளம், பாக்குவெட்டி, கருங்குளம், மருதங்கநல்லூர், சோடனேந்தல், முஸ்டக்குறிச்சி, முதல்நாடு, அரிசிகுழுதான், கே.பாப்பாங்குளம், செந்தனேந்தல், சீமனேந்தல், பூமாவிலங்கை, குண்டுகுளம், கே.வேப்பங்குளம் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட சுற்று வட்டார கிராமங்களில் உள்ள விவசாயிகள் தங்களது வயல்களை உழுது நெல் விதைத்திருந்தனர்.

தற்போது வயல்களில் முளைத்துள்ள பயிர்கள் மழையின்றி கருகி வந்தன. இதனால் விவசாயிகள் கவலையில் இருந்து வந்தனர். இந்நிலையில் நேற்று மதியம் கமுதி, கோட்டைமேடு, பசும்பொன், அபிராமம், கருங்குளம், பாக்குவெட்டி, புதுக்கோட்டை உள்ளிட்ட பகுதியில் அரை மணி நேரத்திற்கு மேலாக இடியுடன் திடீர் என கனமழை பெய்தது. இதனால் கமுதி பகுதியில் வெப்பம் தனிந்து குளிர்ச்சி நிலவியது. மழையால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.